உ

கருப்பண்ண சுவாமி பதிற்றுப்பத்தந்தாதி

இந்நூல்

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா கண்டரமாணிக்
கத்தில் வசிக்கும், வைசிய குலதிலகர் மகா-ள-ள-ஸ்ரீ
க. ப். ள. க. கு. கருப்பன் செட்டியாரவர்கள்
விருப்பத்திற் கிணங்க

மேற்படி தாலூகா கத்தப்பட்டென்னும் திருப்பதியில், அன்னோ
ரால், தமது இஷ்டகுல தெய்வமாகக் கொண்டாடப்
பெற்றுவருகின்ற கருப்பண்ண சுவாமி மீது

மதுரை சேதுபதி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
K. M. முத்தைய பிள்ளையவர்களாற்
பாடப்பெற்று

மதுரைத் தமிழ்ச்சங்கம் பவர் ப்ரெஸில்
அச்சிடப்பெற்றது.

Copy Right Reserved

முதற் பதிப்பு 800
1918௵ ஜூன் 15ல

உ

புதுக் கறுப் பையா துணை.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

விநாயகர்-காப்பு.

கந்தார் கடம்பனைக் கத்தப்பட் டாள்கறுப் பண்ணல் புகழ்
அந்தாதி பாட வருள்செய்கு வாயர னார்க்கு கந்த
மைந்தா கடகரி மாமுகத் தாய்மலை யாம்ம கள்தன்
கந்தா வுயர்பெரு வாழ்வேயெல் லோர்க்குமெய்ந் நாயக மே. 1

சிவ பெருமான்.

காவுக் கிறையைக் கடுவுண்டு காத்துக் கடற்கி டந்த
தேவுக்குச் சக்கரந் தந்து திசைமுகன் சென்னி குறைத்
தேவிற் றிகழ்விழித் தேவிக்குக் கூறுடம் பீந்து தொண்டர்
சேவிக்கக் கத்தப்பட் டேன்றி முளைத்த சிவக்கொழுந் தே. 2

[illegible]ல்லையும் பாம்புங் கடுக்கையுந் திங்களுங் காத லுறத்
தங்கி யிருக்குஞ் சடையுடை யாய்முந்தை தந்தி யுரித்
தங்கையில் மான்மழு வேந்துமெண் டோளுடை யாதி சிவ
சங்கர தாணு சதாசிவ நின்புகழ் சாற்றுது மே. 3

ஆதிமுக் கண்ணுடை யாய்நெடு மால்விதி ஆய்வ ரிய
சோதிச் சுடர்ப்பிழம் பேகொடுங் கூற்றுயிர் தொல்லை யுண்ட
தி இல்கங் காள புராந்தக செவ்வந்தி வண்ண நினை
யோதுந் திறமுடை யாருறை வார்நின் னுலகிட மே. 4

குமரக் கடவுள்.

மலைமா வெறித்த வடிவே லழகனை வான வர்க்குத்
தலையான தான மளித்துத் தனிப்புகழ் தந்த வனை
நிலையான சேவற் கொடியயர்த் தோனை நினைப்ப வர்கட்
குலையாத ஞான முணர்த்துங் கடம்பனை யுள்ளுது மே. 5

கிள்ளை மொழிந்தெய்வ யானை மணாள கிளரொளிசெய்
வள்ளிக்கு மால்கொண்ட கங்கை மைந்தா மலரோனை முனந்
தள்ளிச் சிறைவைத்த சாமி சரவணச் சண்முகத்த
புள்ளிக் கலாபி யிவர்ந்தவ னேயுனைப் போற்றுதுமே.

வேலுக் கிறைவன் விசாகன் இலம்பன் விரிந்த மறை
நாலுக்கு மேலவன் மால்மருகன்விரை நாண ளினக்
காலுக்கி சைந்த சதங்கை யடியிணை கண்டுருகி
மேலுக்கு வாழ்வது வேட்டுகின் றூர்க்கு வினையில்லையே.

153488

ஐயனார்.

அரிகர மைந்தனைப் பூரணை கேள்வனை யாரியனை
விரிபுகழக் காரியை வெள்ளானை யூர்தியை மெய்ய டியர்க்
கருநெறி யோகியை யார்கவி வண்ணனை யையனைப்புள்
வரிமலர்த் தாரணி புட்கலை காந்தனை வாழ்த்துதுமே.

Q2998140
N18

சுந்தர ராஜப் பெருமாள்.

அந்தார்க் கின்னமிழ் தீந்தரு மூவரை யன்று படிப்
பந்தனஞ் செய்து விரைச்சாப்பி ராணியிப் பார்வி யக்கத்
தந்துகத் தப்பட்டி டந்தனி வாழுந் தயாப ரனுஞ்
சுந்தர ராஜப் பெருமா ளிணைப்பதஞ் சூடுதுமே.

வண்டலம் பாத துழாய்மலர் மாலை மௌலி யனைத்
தண்டலைச் சோலை யழகனைச் சாகர மேற்று யின்று
பண்டை யுலக மனைத்தையு முண்டுமிழ் பண்ண வனைத்
தொண்டு நின் றூரவர்க் கேவினை யாவுந் தொலைந்திடுமே. 1

ஆய்வளைப் பூமினை மார்பிடங் கொண்டபஞ் சாயு தனை
வேயுறு தோளித் தரைமகள் கேள்வனை விண்ண வர்க்குக்
காயினல் தந்த கழற்கா லரக்கனைக் காதி யநற்
சேயரிச் செங்கம லக்கண னைச்சிந்தை செய்துதுமே. 1

வீர பத்திரன்.

அன்று நுதற்கண் பிறந்து சிறவிசிவாக்கு மகம்
பொன்றுற வன்னவன் புன்றலை கொய்து புராந்த கற்குக்

... காப்பக ... 900 008

தன்றிறங் காட்டிப் புவன மனைத்துந் தனிப்பு ரந்த
மின்றிகழ் செஞ்சடை யாயுனை வேட்டினர் மேலவ ரே 12

வைரவன்.

காரொளி வாம்பரி யாளியை மன்றல் கமழ்த ருசெங்
தாருடை வேந்தனை முத்தனை மண்பொதுத் தந்தை சிரங்
கூருகி ராற்குறைத் தெற்றிய சித்தனைக் கொண்டு மனம்
நேருறக் கைதொழு வாரவர்க் கென்று னெரியிலை யே. 13

கறுப்ப சாமி.

வேறு.

கருமுகில் படியு மேலைக் கடற்புறந் திகழ் மருங்கா
புரியதை யொரு குலாலன் வேட்கையிற் புறத்த தாக்கி
மருமலர் வாவி சூழ்ந்த கத்தபட் டிடத்து வாழுந்
தருபுகழ்க் கறுப்பை யாநின் றளிணை சென்னி சேர்ப்பாம். 14

ஆயிரத் திரட்டி யாது மடல்வலிக் கரங்க ளேந்து
மாயிரும் படைகொண் டங்நாட் சிறுவிதி யவனை மாய்த்துந்
தீயுறு படுகர் காப்பண் செறிதா நடந்து தொண்டர்
ஆயுரு வரங்க ளீந்து மவிர்செய்நின் னடிகள் ஆய்வாம். 15

மாவிருஞ் சோலை முந்தை மருவிநின் றழிப்பு சூழ்ந்த
சிலமில் பதினெண் சித்தர் சிரம்படுத் தழித்த நின்றன்
பாலுறு வலத்தால் வேரிப் பளிதமு முருகுங் காட்டும்
வேலுறு கரத்தாய் நின்றாள் மேயினர் வினைகள் தீர்த்தார். 16

காளி.

வேறு.

கங்காளி வீரிவே தாளிமா தங்கிமுக் கண்ணி யைக்கொன்
மங்காத மொய்ம்புடைத் தாரகற் செற்றசொல் வல்ல ணங்கைப்
பொங்காளி யூர்தியை யாமனை சூரியைப் போர்மு கத்தே
உங்கார ஆரணி யைமற வாதுள்த் துன்னுது மே. 17

மாலினி நீலி பயிரவி சாமுண்டி வார மூங்க
மேலெழுந் தோங்கவிர் விம்முலை யாயொரு மேதி தலை

காலெழுந் தூன்றிய சண்டிகை கன்னி கௌரி யடற்
சூலிச யமக ளேகத்தப் பட்டுறை சுந்தரி யே. 18

கொற்றவை சக்கிர பாணி விமலை குமரி சிவை
வெற்றமா காளிநின் சன்னிதி மாவிளக் கேற்ற விழைந்
துற்றம டந்தையர் சேர்த்திடு மாமுளை யாக வுளம்
பற்றிடு நாரணி யேநின் னிணைப்பதம் பாடுது மே. 19

முனீசுரன்.

ஆடர வாபர ணன்றனை வேண்டி யருந்த வங்கள்
நாடிநின் றன்னவன் பேரருள் நல்க நலமனைத்துங்
கூடிய வன்றிறம் யாவும் படைத்துக் குளிர்க ருணை
நீடிய வாள்விழி யாயடி யார்க்கு நெடும்புணை யே. 20

நூல்.

அத்தன் பிரம னறுமுக னாழ்கடற் பள்ளி கொண்டோன்
சித்தந் திகைப்பத் திறம்பல தாங்கிச் செகந் துறக்கம்
எத்திசை யுந்தணி வீரந்தந் தேகறுப் பைய வெழிற்
கத்தப்பட் டென்னுந் தலத்துறைந் தாய்புகழ்க் காவல னே. 1

காவல னானுனைக் கைதொழு தேத்திக்க ளித்திடப் பே
ராவல்தந் தாயெனை யாண்டுகொண் டாயுட லாவி பொருள்
யாவுநினைக்களித் துன்பணி யென்பணி யாவு னது
சேவடிக் கன்புகொண் டேனதை யும்முளந் தேர்குவை யே. 2

தேர்ந்தனை யாவினி யிம்மையி லெந்தன் செயலனைத்தும்
ஆர்ந்த அருட்கறுப் பண்ணநின் றன்செய லாவ துகாண்
வார்ந்த நெடுஞ்சடை வாளெயில் தாங்கியெம் மண்ட லமுஞ்
சேர்ந்த புகழுடை யாயினி நின்செயல் செப்புவ தோ. 3

செப்புந்த ரத்தில னேகறுப் பையநின் தேசு புகழ்
ஒப்பில வையமும் வானமும் பாதலத் துள்ள வரு
முப்பக லுந்தம தின்னல் துடைத்து முழுந லமுந்
தப்பறு வாழ்வும்பெற் றாரது நின்கழற் சார்புகொண் டே. 4

கொண்டன னென்பெருஞ் செல்வ மதாயுன் குளிர்க ருணை
விண்டன னூழ்வினை யிம்மையி னம்மையின் மெய்ந்நலமுங்
கண்டன னின்னடி யேன்கறுப் பையய கவின்றி கழ்நின்
பண்டரு மேனிகண் டேனிவை யெய்தரும் பாக்கிய மே. 5

பாக்கிய மேகத்தப் பட்டா சேபல காலு முனைத்
தேக்கி யுளந்தனிற் சிந்தைசெய் வார்க்கொரு தீங்க ரும்பே
ஆக்கியுந் தெய்த்து மளித்துங் கருணைசெய் யாண்மை யர்க்கு
நீக்கருந் தேங்கனி யேயென் குடிக்கு நெடுந்துணை யே. 6

துணையே சித்தர்பதி னெண்மர்தம் வஞ்சந் தொலைத்த ரவத்
தணைசேருஞ் செல்வனைக் காத்துப்பு கழ்செய் யடல ரியே
பணைசேர் நினதிரண் டாயிரந் தோள்வலி பன்ன வல்லார்க்
கணையே புவனமெல் லாங்கத்தப் பட்டிருந் தாள்பவ னே. 7

ஆள்பவ னேயுல கேழிரண் டோடண்டத் தப்பு றத்து
நீள்பவ னேகத்தப் பட்டிடை வாழு நிலாம தியே
வாளுழ வாமருங் காபுரி நீத்திவண் வந்து றைந்துன்
தாளடி மைத்திற மென்குடிக் கீந்த தனிமருந் தே. 8

மருந்தே மணியே மலையே மறைதிகழ் வான்பொ ருளே
திருந்தா ரவர்க்குத் திறலரி யேதிரை சேர்க டலே
வருந்தா து பெற்றநல் வானமு தேவழு வின்றி யெனைக்
கருந்தாதிற் பற்றிக்க லக்கும்பி ணியைக்க டிந்தரு ளே. 9

அருள்வா யருட்கடைக் கண்மலர்ந் தென்று மளிய னல்லல்
தெருள்வாய் தெருளற் கரும்பொரு ளேசென்மத் தெண்டி ரையில்
மருளா வுழன்றுநின் மாணடி யாம்புணை மன்னினவர்க்
கிருளாகுஞ் சிந்தையுண் டோகறுப் பண்ண இசைத்திடி னே. 10

வேறு.

இசையு மெழில்கொள் பூதலமு மேனை யுலகுங் கொளுமோவி
தசையு முதகத் துறைவகறுப் பையா வியப்பென் றுய்ந்துடல
மிசையு நசைகொள் எளியேனும் விரைந்து காண மேவுமிரு
தசையு மலிந்த விழிகொளுமோ நின்பாற் றயங்குந் தனியழகே. 11

அழகு திகழ்செம் பட்டுடையு மாரம் பொலியு மணிநிரையும்
பழகும் வாச மலர்த்தொடையும் பதமஞ் சாரு மிணைவிழியு
முழவைப் புறங்கொள் பணைத்தோளு முளரிக் கரமு மூன்னிலங்கக்
குழக னீவந் திடவிருகண் குளிர்ந்து மலரக் காண்பேனே. 12

காணக் கிடைத்தே னினதுதிருக் கோலங் கலங்கு மெனதுமனம்
பூணக் கிடைத்தே னினதுபொலன் தாள்கள் நின்னைப் போற்றிநின்று
பேணக் கிடைத்தே னினதுதிரு நாமம் பெறும்பே றெனைப்போன்று
மாணக் கிடைத்தா ரெவரழற்கண் வந்தோய் வனைந்த வார்கழலோய்.

கழலோ டம்பொன் சிலம்பொலிநின் கனகந் திகழுங் கவினடித்தண்
ணிழலே யளித்தி யதனினுமோர் நீங்கா திலகு நீள்நிதியம்
விழலேழ் பிறவி நெடுவேலை வீழ்ந்து தவித்துத் துறைதெரியா [ளே.
துழல்வேன் றனக்கிங் குளதோவே லோங்குங் காத்த வொண்பொரு

பொருளாய்ப் பொருளின் பயனாகிப் பொருந்தும் பெருவாழ் வெனக்களித்த
அருளார் கனியே அற்புதமே அலைசேர் நிறைநீர்த் தடங்கரைகொண்
டிருளே யுலவா தெப்பொழுது மிலங்குங் கதிர்கால் மணியினங்கள்
மருளா தோங்க வயங்குகத்தப் பட்டென் பதியில் வாழ்பவனே. 15

வாழ்வை வாழ்வு தருமுதலை மலர்க்கா வுறையு மணியினையென்
தாழ்வைத் தவிர்த்த தனிப்பொருளைத் தக்கோர்க் கெளிய தவப்பெருக்கை
வீழ்வைக் கடிந்தென் குடிப்புரந்த மேலாந் துணையை வேண்டுமவர்
ஊழ்வித் தரிக்கு மொருசுடரை யுள்ள மறவா தேத்துவனே. 16

ஏத்தும் பரிசு நின்புகழ்சே ரிசைகொண் டிலகுங் கவிநாவும்
பூத்த நினது பொன்மலர்த்தாள் புனைந்து சிவந்து பொலிதலையுங்
கோத்துக் குவிந்த கரங்களுநின் கோலப் பெருக்கி லீடுபட்டுப்
பார்த்துக் களித்த கண்களுநான் பெற்றேன் படர்செஞ் சடையோனே. 17

சடையா யெனைப்போன் றெவர்படைத்தார் சாற்று மினைத்து மிகபாமு
முடையாய் போக மிதன்மேலா யுற்றா ரெவர்கொல் நினது புகழ்
நடையா மனைத்து மெனைப்போன்று நவிலப் படைத்தா ரேவர்நினைப்
புடைகாத் திருக்கு மேற்றமுமெற் போன்றா ருடையார் பொன்மணியே. 18

மணியே மணியிற் றிகழொளியே மாறா தொளிரு மணிபுனைந்த
வணியே அணியும் அணிக்கழகே யாராய்ந் துன்னை யணுகிலர்க்குப்

பிணியே பிணிக்கு மருமருந்தே பீடா ரமரர் பெருவிருந்தே
பணியே னேனை யொருவரையு நின்றாள் மலர்க்கே பணிபடைத்தேன்

படைத்தா யுள்ள முருகுமன்பு பரிந்தே யெனக்குப் பாரிதனில்
உடைத்தாய் மாயப் பிறவியையு முன்றாள் சூடும் பணியெனக்கோப்
படைத்தாய் செனனத் தழுக்கையெலா நின்னா ரருளா மம்பதனால்
துடைத்தாய் ஐய நின்கருணைப் பெருக்கை யெவனோ சொல்லுவதே.

வேறு.

சொல்லொடுமெய் நெஞ்சுமுற வேசுடர்செய் வேலோய்
அல்லொடு நெடும்பகல் அறைந்திடுவ னின்சீர்
புல்லளவு மேனைவினை நெஞ்சிடை பொருந்தேன்
எல்லையி னெடும்புக ழிசைந்தவலி யோனே. 20

வலியுறு கடும்பகை வருத்துறு முரோகம்
நலிதருகி லாதெனை நயந்துதனி யாள்வாய்
கலிதவிர் குணாகர கறுப்பண வெனக்குன்
பொலிதரு மருந்தையை பொருந்துதுணை யன்றோ. 22

அன்றுமென தோர்துணைவ னீயாக வென்றும்
நின்றனது நேர்அடிமை யானிதனை யுள்ளம்
நன்றுற உணர்ந்தருள்வை நானலிவ தோநீர்
துன்றிய தடங்கரை துலங்குமுர வோனே. 23

உரனுடை நெடுங்கழ லொலிக்குமிரு பாத
விரைமுளரி யேழைதலை மீதுவகை கூர
தரமுடைய னென்றுற மிலைந்தசலை வாநின்
வரமுடை நெடுந்தையை வரைந்திட வலேனோ. 24

வல்லவ விழைந்துமரு ளார்ந்தமதி யேனை
நல்லனென வேகருதி யாண்டுமுனா காடி
ஒல்லையி னளித்தனை யுனைத்தெளியு மோர்மை
புல்லிடை விடுத்தமிழ்து போன்றதது தூயோய். 25

தூய்மையி னிருந்துநெறி நின்றுமொரு தொல்லை
டாய்வரு வசுந்தரை கிடந்துநடை தந்தும்

வாய்மையி னினைப்ப துனை வஞ்சனெடு வேள்வி
சாயசெடு வேல்மழு தரித்ததனி வீரா. 26

வீரரெவர் நின்னைநிகர் வார்விழைவி னும்பர்
ஏர்மலரி னேத்துவர் முராரியெழில் வேதா
நேர்உற நினைப்பருனை நின்கருணை வெஃகி
ஆரொருவர் நேர்பவர வர்க்கெளிது னன்பே. 27

அன்பநினை நாடியொரு கோடிதவ மாக்கும்
மன்பதையிவ் வையமிசை வாழ்க்கைநல மெய்தி
துன்பமில் துறக்கநிலை மேவியொரு தோமில்
இன்பமுற வாணிதிய மெய்திடுவ ரன்றே. 28

எய்தரிய செல்வஉண்மை மைந்தஇசை தொண்டர்
மெய்திகழு ளத்திறெனளி யேஒளிசெய் வித்தே
செய்தலில பூதநிலை யாயதிற லோனே
வெய்துடை யெனக்கெளிமை யாயினை வியப்பே. 29

வியப்புறு நிலையம் விரிந்தமறை யீரேமோ
நயப்புறு கலைத்திரள் நகைக்குமதி யோநேர்
பயப்புறு சரோசமுல ரோபிறிதெ னுள்ளோ
கயப்புனல் நெடுங்கடல தோகமுற கில்லேன். 30

வேறு.

இல்லையென் மனத்தி னின்றன் எழில்திகழ் கோல மல்லா
தெல்லையி னெடுநீர்ப் பாங்க ரெழுந்தருள் கறுப்பை யாவண்
முல்லையம் புறவத் தைய முக்கணு செக்கர் வானத்
தொல்லொளி வணத்தாய் நின்னைச் சூழ்நெறி முறையிற் சூழ்ந்தேன்

சூழ்ந்தன னளிய னின்னைத் துதித்திட மறக்கி லாதே
பாழ்ந்தன னினது காத லார்கவி பகில மூன்றுங்
தாழ்ந்திட லின்றிச் சேர்ந்தெப் பொருளினுந் தனித்து நாயேன்
வாழ்ந்திட வெனதுள் ளென்று மருவுறு மறவி யூற்றே. 32

ஊற்றிருக் தொழுகிற் றென்ன உனதருள் பொழியுங் கண்கள்
ஆற்றுறு விடும்பை கூர்ந்த வளியனுக் கிரங்கி நோக்க

நாற்றிசை யனைத்து மெய்தா நன்னலம் பெற்றே னின்றாள்
போற்றினன் கறுப்ப வள்ளால் மற்றினிப் புகல்வ னென்னோ. 33

என்னென வுணர்வே னின்னைக் கத்தப்பட் டிறைவ யாரும்
பன்னரும் பொருளே மற்றும் பொருள்தரு சுகமே பார்க்கின்
துன்னிய சுகத்தி லெய்துந் துகளுறு மருளே கூர்ந்த
அன்னசை மருளிற் றோன்றும் அரும்பெருந் தெருள தேயே. 34

தெருவொடு சிவிகை வையஞ் சிந்தூரந் துரகஞ் செய்ய
பருமணி மகுடங் காணம் நித்திலம் பணைத்த திண்டோள்
உருவலிக் குலிச மேந்தும் உக்கிரத் தொருவ நின்பால்
ஒருமுறை யேனு மன்பு பூண்டவர்க் குரிமை யாமே. 35

உரிமையென் றெனக்கொன் றுண்டோ உறுநலம் வரினு மாறித்
திரிதரு செயல்வந் தாலுஞ் சேயனேன் தெரித லாமோ
சருவமு முனக்கே பாரஞ் சடையுடை யண்ண லேயான்
அரிதினிற் படைத்த வெல்லா நின்னதென் றளித்தே னன்றே. 36

அன்றுகொண் டின்று காறு மலைபுனற் றுறையாய் நின்றாள்
ஒன்றல தில்லை வேறு புகலென உளத்தி னோர்ந்து
நின்றனக் கன்பு பூண்டேன் நினதுவண் புகழே யோத
வென்றுமெற் பிணிப்ப துண்டோ யமபய மிசைக்கி னையா. 37

அய்யனே யரும்பி யொன்றா யகிலமெங் கெங்கு மாக
மெய்யனே விரிந்து நின்றாய் அனைத்தையும் விடுத்து நீங்கிச்
செய்யனே வெளிய னுள்ளுங் கத்தப்பட் டிடம்போற் சேர்ந்து
துய்யனே பொருந்தி நின்று சுடர்தரு சுகிர்த மென்னோ. 38

என்னுளத் தினிது நின்னை யிருத்தினிற் கன்பு பூண்டு
பொன்னொளிர் நினது பாதப் போதினை வழுத்தி யென்றும்
பன்னுவ துனது சீர்த்தி பார்த்துளங் களிப்ப தெங்கும்
மின்னுறு நினது மேனி விளக்கொளி நில்வ தேயே. 39

நிலவுறு திசையும் பாருங் ககனமு நோக்கி நின்னை
யலதொரு தேவுங் காணேன் அயிலவிர் காத்த [illegible]
குலநெறி முறையிற் பற்றிக் கொண்டன [illegible] சொற்கள்
நலமில வேனு நின்றனு மங்கள் துதியன் றேயோ. 40

183488

வேறு.

துறியாதுநின்ற னெழிலார்பதங்கள் தொழுதாடிநீடு சுடர்கால்
நிதிபோலிலங்கு னெழில்மேனிஐய னொடியேனுநேர நினையார்
பதியோடுவண்மை குலஞானமான பலவுங்குறைந்து தினமுங்
கதியேதுமின்றி யிரவேயுழன்று கடைவாயில்தோறு மலைவார். 41

அலைசேர்கவந்தம் அனல்கால் அனங்கை அகல்மாகமோடு பரவுங்
கலைசேருமோதை சுவையூறுசோதி கடியுங்கலந்து நிலவுந்
தலைசேருமன்றல் தருநீர்மருங்கு தனிநாதநின்ற னருண
நிலைசேர்சரோச வடிசாருநீரர் நெரியாதசெல்வ நெறியார். 42

நெறிவந்தசெல்வ மகனோடுகல்வி நிலைகொண்டநெஞ்ச மமரர்
குறிவந்தமேனி குடிலங்கலந்து குலவாதுயர்ந்த வுறவோர்
கிறிவந்திலாத நலமேபொலிந்து கிளர்கின்றதான பலவும்
அறிவொன்றநின்ற வடியாரவர்க்கு னருள்சேர்கடைக்க ணருளும். 43

அருளுக்குவேறு பொருளொப்பிலாத அழகன்கருப்ப வநகன்
தெருளுற்றதெய்வ மறைதேடநின்ற திருவுற்றபாத மலர்கள்
பொருளுற்றிலங்கு புணையொக்கநல்ல புகலென்றுகோடி மனமே
மருளுற்றுநின்று வெருவுற்றிரங்கல் மதியோநினக்கு வலனே. 44

வலமேவுசெங்கை மழுவாவனேமி வரனாரணங்கள் பரவ
நிலமீதிலங்கு திறல்சேர்கருப்ப நிமலன்பிறங்கு கழல்கள்
பலமேமிகுந்த பயனென்றுணர்ந்து பணிவாரரம்பை தொழவே
பொலமேதுலங்கு சுரர்நாடமர்ந்து பொலிவார்நலங்க ளுறுவார். 45

உறுவேரியிண்டை மலர்கின்றவாவி உறநீவிளங்கு தலமும்
நெறிவானுநின்ற னுருவாகநின்ற நிழல்கால்நிறைது வடிவும்
பிறியாதுமுன்ன களியாகிநெஞ்சு பிளவாகுமாறு பொரும
அறியாதிருக்க வசமோகருப்ப வநகாவகத்து நினையே. 46

நினைவோடுகோடி மலரேடுகஞ்ச நிகர்நின்பதங்க ளிணையே
வினைபோகநின்று தினமுஞ்சொரிந்து மிசவும்பணிந்த நெறியோர்
சினைமேவுதேவ தருவோடுகங்கை திகழ்சம்பமீளி யுரவும்
பனைநேர்நெடுங்கை யிபமுஞ்சிறந்த பதமும்பொருந்தி யுறைவார். 47

உறையேநிறைந்த கரையேயெழுந்தெ னுளமேகலந்த முதல்வா
மறைமேவுநின்ற னடிசென்னிசூட மலைபாதவாழ்வு தருவாய்
கறைசேரொனவி யுணர்வேகநின்று கழிகின்றகால மதிலென்
குறையேநினைந்து குழகாவிரைந்து குறியாய்முனாக வருவாய். 48

வருவாய்கருப்ப வரதாநினது வரைபோலிலங்கு புயமுஞ்
செருவாய்கணிச்சி வடிவேலமர்ந்த திறல்கொண்டிலங்கு கரமும்
மருவாய்மலர்ந்த தொடையும்பிறங்கு வயவாளமைந்த வடிவும்
உருவாயெனெஞ்சி லிருபோதுமென்று முதியாதிருந்த விலையே. 49

இலையானையன்பு மிலையாரிடந்த னிசைகூறுமன்பர் கருணை
மலையானையண்ட முழுதுஞ்செறிந்த வலியானைவானு நிலனுந்
தலையானையென்று மழியாதமேன்மை தருவானைவீர நெறியின்
கலையானையுள்ள நினைவார்களல்லல் களைவார்நலங்கள் பெறுவார். 50

வேறு.

பெறுவி லைப்பனைக் கத்தப்பட் டெனும்பதி பிறங்கும்
கறுமவர்த்தொடைப் பண்ணவ னவனருள் கலத்தால்
முறிய வென்றுவன் மறலியை முரணற நெஞ்சே
சிறுமை கொன்றொரு சிறப்புடைத் தாதலுந் திடனே. 51

திடன ழிந்துமைம் பொறிநிலை திரிந்துமெ னுவி
உடல்பி ரிந்தறி வழிந்திடு மமயமுன் னுவந்தென்
னிடமெ ழுந்தறப் பதமிசைத் தருளுவை யிசைமா
வடமன் கத்தப்பட் டெனும்வளம் பதிவளர் வாழ்வே. 52

வாழ்வெ னக்கினி தளிப்பது நின்கடன் வரதா
பாழ்வி னைபல எளியனென் புரிந்தநின் பயனு
ஏழ்பி றப்பும்வந் தெய்தும்மல் லாலெறும் மறலி
சூழ்வி னைப்படி யொல்லைவந் துறுவது முண்டே. 53

உண்டு மிவ்வுடற் கழிவென வோர்ந்ததை பொறுத்துத்
தொண்டு நின்றொளிர் கருப்பண லடிமலர் தொழுது
வண்டி னெய்தியம் மலரிடைக் கிடந்திலை மதிசேய
விண்டு நின்றனை யினியுனைப் பேசினென் வினைவே. 54

விளைவு ணர்ந்திலன் கறுப்பைய வேண்டுவ துனது
தளவ ரும்பிய இளநகை தருகுறிப் பதனால்
களைய றப்பெறு கிற்பது மல்லதுங் கருத்தின்
இளைய னோர்ந்தில னின்னுள மிருப்பல தெதுவோ. 55

எதுவென் றுள்ளுவ னின்றனை யேத்திடுந் த்யானந்
ததிகை மத்திடைப் படுந்துய ருழன்றனன் தரைமேல்
விதியின் வந்துவந் திவ்வழித் துயரினி வேண்டேன்
துதிகொள் முத்தலை வேலவ வென்முக நோக்காய். 56

நோக்குங் கண்ணியிற் பட்டுழல் பறவையி னூங்கு
தாக்கு வெம்பவச் சலதியி லிடைந்தனன் சரணீ
போக்கில் கன்மங்கள் போக்ககி லேன்கறுப் பையா
ஆக்கு நன்மைக ளனைத்துமெற் கனுமையி னளிப்பாய். 57

அளிய னேகறுப் பையநின் னடிமையிற் பிழையேன்
ஒளிசெய் பொன்னசை யோவியப் பேதைய ராசை
தொளிசெய் பாநிலத் தாசையுந் தொடர்ந்தினல் தரலால்
இளிசெய் இம்மையின் தொடர்பறுத் துய்ந்திட லேதோ. 58

ஏது நற்சுவை யில்லன வாயினு மெளியேன்
ஓதும் புன்மொழி நின்செவிக் குணர்த்துவ னனைத்துந்
தீது டைத்தில வாதலின் கறுப்பைய சிறிய
கோதி லாப்பசுங் குழவியின் செயலெனக் கொள்ளே. 59

கொள்ளு நின்னுள மவ்வழி யெனக்குணக் குன்றே
உள்ளு கந்தனன் கறுப்பைய உனக்கய லில்லை
தெள்ளி தென்றனை வருத்துறு நோய்தனைத் தீர்த்துத்
தள்ளி டாதுநின் திருக்கரத் தணைகுவை தகவே. 60

வேறு.

தகவோடுன மலரோரடி தமியன்தலை சூடி
இகமீதெனை யாள்கென் றுனை யினிதேதொழு தேனை
அகமோடுற வனைதந்தென தருநோய்களை யாயேற்
சுகமேபெறு மெதுநாளுரை துய்யாகறுப் பையா. 61

ஐயாநினை யகமெங்ஙனம் வைப்பேனறை கழலாய்
மெய்யாபுல னைந்தாயினு மொன்றேனும் விளம்பின்
பொய்யாதுறு மறிவெய்தில தந்தோபுகல் கின்ற
மையார்விட மெதுதன்னிட மாணுர்நல மேவும். 62

மேவேனினை யிளகேன்மனம் விழையேனுளம் வினையேன்
கோவேநினை யிசைகொண்டுரை கொள்ளேனிணை யடிகள்
தூவேன்மல ரினியுய்வழி துணைகொண்டுனை யல்லால்
ஆவேனுள னெனஆய்வதும் ஐயாமுறை யாமோ. 63

முறையேமல ரடிபூசனை முன்னேநெறி யுன்னேன்
கறையேதரு பொருளால்வரு கனமுஞ்சிறி தில்லேன்
நிறையேதுமில் பொய்வாழ்விஃ தெனவோர்ந்தகி னீங்கேன்
இறையேஇக பரமும்இசை கில்லேன்வழி யென்னே. 64

என்னேபடி றுடுமெய்சொலி யென்றும்பிழை செய்தேன்
மன்னேயிழைத் திடுதீவினை மட்டோஇலக் கில்லை
பொன்னேயிவை விடியும்பொழு துண்டோபுக லில்லேன்
அன்னேநின தருளுண்டெனி லதுவும்முள தாமே. 65

உளதென் றுட லதனைஇயுள நாடிநிதி தேடி
வளர்கின்றறி விலர்புன்மனை வரனேயொரு பொழுதாங்
களமொன் றிரு பொழுதெய் திடு வேனேலவர் அகல்வார்
விளவொன் றுமெ னுளமென் றுடல் மெலிவொன் றுத லழகோ. 66

அழகார்தட மணிசேர்கரை யரசேபக லிரவும்
பிழையாயினு நினதொண்புகழ் பேசும்பெரு வலியும்
விழைவாயுன தருள்கூர்நிழல் மேவுந்தனி நெறியும்
இழைசேரெழில் திகழ்மார்புடை யெந்தாய்பெறு வேனோ. 67

பெறுவேனுள னலனோவது பேசாய்கறுப் பையா
அறிவாய்அல தெதுசெய்யினும் ஐயாகமை செய்தே
செறிவாய்நல மீவாய்புக ழன்றோசிறி யேனுன்
குறியாய்நவ லுவதென்னுள குறைசேர்கழ லுடையாய். 68

உடையாய்ஒரு பொருளாவது மாகாதது முலகில்
மடமாருயிர் விளியும்புவி வாவுஞ்சக டெனவோர்

இடமேவிடு வதுமீள்வதும் நின்தாரருள் எளியேன்
அடைவாய்மகிழ் தலுமாடலு மகநோதலு மென்னே. 69

என்னைபக லுஞ்சாயமும் என்றாழ்குண நாகம்
முன்னேர்வரு போழ்திம்மணி முளரிச்செழு மலர்போன்ம்
நின்னேரடி தொழுவேனிது நெறியென்கட னுசப்
பின்னைவயற் கென்றுலுறு பீடார்தொலை வேலை. 70

வேறு.

வேலை நேர்தடஞ் சூழ்தரு வேரிசேர்
சோலை வாய்கத்தப் பட்டுறை துய்யனே
மேலை நல்வினை மேவுத லானுனைக்
காலை மாலையுங் கைதொழு தேத்துவாம். 71

ஏத்து மென்வினைப் பாச மிறுப்பைநீ
பூத்த யங்கயன் நேமி புராந்தகன்
மாத்தி ரைதிறம் பாதுதம் மாடுறும்
நீத்த வில்வினை யென்று நிகழ்த்துமே. 72

நிகழு மென்கலி நீதுடைத் தாயிலை
திகழ்தொ ழும்புடை யேனெனச் செய்திலை
இகழ்வி னேற்கிரங் கிற்றிலை யென்றுநின்
புகழி லக்கவிப் பூதலங் தோன்றினை. 73

தோன்றி டப்பயி ரிட்டிளை சூன்றவின்
மான்ற சன்மத் துயிரிட்டு வாழ்வினை
ஊன்றிலை நம னுர்தெலை யையனே
சான்று னுணையிட் டுத்தடுத் துய்வனே. 74

உய்வ னேனுமெ னல்லலு ணர்ந்தவர்
அய்ய நெய்யிற் குழைகுவ ரன்னவை
செய்யு வாயுரை செய்யின்பட் டோலைகள்
மெய்யி னுயிரத் தாயிரம் வேண்டுமால். 75

வேண்டி யேட்டுக்கோ ராயிர மேல்வரி
தாண்டி டப்பொறிக் குந்திறல் சான்றவர்

நீண்டி நின்றவை சற்று தெரிப்பரால்
ஆண்ட வாயிதி லையமற் றில்லையால். 76

இல்ல துள்ளதை வேண்டிநின் றென்றுமே
புல்லொ மூக்கம் புகுந்தலைக் தேன்புகழ்
வல்லை யோரினும் வல்லவ நின்பெயர்
சொல்ல வுந்தர மெய்திலன் தொல்லையேன். 77

தொல்லை நாட்கத்தப் பட்டெனுஞ் சூழல்வாய்
அல்லல் நீக்கிநின் றுள்கறப் பண்ணலே
இல்லை யென்றனை யெய்தினர் யாவரும்
மல்லல் நீள்வள மல்க விளங்கினர். 78

விளங்க நின்று விலக்குவை யோவெனைக்
களங்கி ருட்கட வென்ற கதைவையோ
துளங்கும் வேனம னானை தொடுந்தகி
உளம்ப டர்ந்தென் னுரைக்குவை வேண்டினேன். 79

வேண்டி யான்சொலும் வெண்கவி நின்செவிக்
கொண்டுங் கைப்பினு மேனை வழித்தவம்
பூண்டு னைத்தெளிந் தெய்திடப் புன்மனம்
மாண்ட தன்றிது மற்றுமெய் யாகுமே. 80

வேறு

ஆரும்வினை மூலமதா யம்மையினு மேழைபொரு
தேகமெடுப் பான்வரினுஞ் சேரரிய செவ்விதிகழ்
போகமன தின்மலர்த்தாள் போற்றுவது நின்னுருவந்
தாகமறக் காண்பதுமே சார்பலதோர் சார்பிலதே. 81

இல்லமது நின்தளியே ஏற்பதுவு நின்தயையே
சொல்லதுவு நின்புகழே தொடுவதுநின் பூசனையே
யல்லதிலை வேறெதுவும் ஐயகறுப் பையவிவை
மெல்லஉள நீயறிவாய் வேண்டுவது மற்றறியேன். 82

அறிவுமென தாருயிரு மாதரவும் யானயிலுஞ்
செறிதருமெ லாவுணவுஞ் செய்வினையுஞ் சிந்தனையும்

மறுவறுநின் ருள்பணியும் வல்லமையும் வாழ்வதுவும்
பிறிவரிய பேர்நிதியு நீயலது பேசினேனே. 83

என்புகல்வ தேழையினே னின்பெருமை யேதமிலா
வுன்புகழை யோதவலா ருய்ப்பருளு மேவருளார்
மன்பெரிய வாகையுளாய் வாய்திறந்தி யான்மொழியின்
என்புகல்கி லாருலகோ ரேந்துசுட ரேர்மணியே. 84

மணியினிடை வாளொளியும் வாரினிடை வான்பனியும்
அணிதிகழும் பானுவிடை யழற்சியு மங்காரகனுள்
தணிவறுவெவ் வழனமும்போன் றெவ்வுலகுந் தரிக்குமொரு
திணியுறுமன் சேவகநின் சேவடிகட் கியானடிமை. 85

அடிமையெனைக் கொண்டணைந்தே யாள்கறுப்பை யாநறிய
கடிமலர்மென் றொடையலுடைக் காவலனீ காளையுநீ
படிமிசையு முதியவனீ பாலகனீ பாரொடுக்கும்
முடிவிலுறு தேவனுநீ நின்கழல்கள் முன்னிடுவாம். 86

முன்னுது முன்னியுமே மூக்கின்றி முருதுணர்ந்தும்
அன்னுவின் றறுசுவையும் அறிந்துமலர்க் கரகமல
மன்னுதின் றளித்தும்விழி யவையின்றி நோக்கியும்வாக்
கென்னுளு மெய்தரிய நின்னடிக ளேத்திடுவாம். 87

ஏத்திடுமிப் பியில்ரசதம் எரிகான விடையுதகங்
காத்திரக்கச் சையிலரவங் காணினுமெய் மருவினவை
மாத்திரையி லறிவதென நினையுழியின் முன்னுலகஞ்
சூத்திரமென் றோர்ந்துநினைத் தொல்லுலகி னாடுவரே. 88

நாடுகுலங் குடிநாமம் நன்னுகுலங் கோத்திரமும்
நீடுமிறப் பிறப்புவண மென்னுமிவை நீங்கிநிலா
வாடுநெடு வெளியாகி யாவுமளித் தருள்நிமலா
சேடுடையம் புயப்பதமென் சென்னிமிசை சேர்க்கிற்பாம். 89

சேருருவ அருவாகித் திகழ்குறிகள் குணமிறந்தும்
ஆருயிர்க ளனைத்தினுக்கு முயிராகி அலங்கொளியாய்
நேரரிய நிருமலமாய் நித்தமாய்ச் சுகவரியாய்ச்
சீர்தருநின் மலரடிக்கண் செழுமலர்தூய்ச் சேவிப்பாம். 90

வேறு.

சேவைதந் தாள்கருப் பைய செம்மையோர்
மேவுறு கங்கைநீ நதியில் மேம்படு
தூபியத் திமையநீ துலங்கு வெற்பருள்
தீவிர வளியுநீ விரைவிற் செப்புமேல். 91

செப்பரி யாகநீ சிறந்த வேள்வியில்
ஒப்பறு சாமம்நீ யோதுஞ் சாகையில்
துப்புறு வேந்தநீ துலங்குஞ் செம்மைய
வப்பெரு நால்வகைப் பகுப்பி னுய்வினே. 92

ஆய்ந்திடு மாதிநீ யறையு கங்களில்
வாய்ந்தவொண் பரிதிநீ கோளில் வானரை
சேய்ந்தவ னீசுரர் தம்முள் இன்சுவை
தோய்ந்தவெண் பரவைநீ கடலிற் சொல்லினே. 93

சொல்லிசை சோமம்நீ கொடியில் தூய்மைய
நல்லர சதுவுநீ தருவில் நாட்டிய
மல்லலைம் பூதங்க ளவற்றில் மாகநீ
வில்லுறு பூசம்நீ யுடுவின் மெய்யினே. 94

மெய்வழிச் சந்திவந் தனையு மேல்வழிச்
செய்வினை யவற்றினீ தேனு வம்நிறை
ஐதிக மாவினி அசையு மெஞ்சுழ
முய்வழிக் கரணத்தினி மந்திரமினே. 95

ஓதிடிற் கல்வியுங் கேள்வி யோடுயர்
மேதகு ஞானமுஞ் சிறிது மேவிலேன்
காதல்செய் யெழிலுடைக் கந்தப் பட்டுறை
கோதறு குழகயான் குறிப்ப தென்கொலோ. 96

என்கொலோ விப்பெருந் திறனு மேற்றமும்
நன்குறப் பொருந்தினை நின்னை நாடிய
வென்குடிப் பெருமையு மேருஞ் சீர்த்தியு
முன்குடிக் கடிமையு முதலிடாயெனின். 97

உதவுவை யெற்குரு நலமு மோதுமிப்
பதமலர்த் தார்கின பணைத்த திண்புயங்
கதமுறு கணிச்சிய கத்தப் பட்டுறை
துறைபுகழ்க் காவல உவந்து சூடுவாய். 98

சூடிய மாலையுந் தொழும்ப னேற்கொளி
கூடிய மேனியுங் குவவுத் தோள்களும்
நீடிய கரங்களும் நிறைந்த பேரருள்
நாடிய விழிகளி னலமு நல்குவாய் 99

நல்குவை யேயினை நயக்கெ துவ்ளிட
மல்கொளி யேயொளி வயங்கும் வானமே
சொல்மல ரேமலர் துதைந்த மன்றமே
அல்கில தன்பர்கட் கினிய வத்தனே. 100

வாழ்த்து

காலைம லர்த்தட மாமலர்க் காகடி கால்கத் தப்பட்
டாலய மும்மவன் சூழடி யாரு மவர்க்க வனி
மேல்வரு கோய்களை ந் தின்பம் விளைத்தவண் வீற்றி ருக்குஞ்
சால வழுடைத் தற்பரன் தாளுந்த ழைந்திட வே.

முற்றும்.

அரும்பதவுரை.

பாயிரச்செய்யுள்:-(1) கம்-நீர், தார்-மலர், தடம்-குளம், பணை-வயல், நந்தா-குறைவில்லாத (5) மலை-கிரௌவுஞ்சகிரி, மா-சூரனுகிய மாமரம், (12) சிறுவிதி-தக்கன், (16) பனிதம்-கருப்பூரம், முருகு-எனுமிச்சை, (18) மேதி-மகிடாசுரன் புணை-தெப்பம்.

நூற்செய்யுள்:-(2) உடலனித்தல்-தானென்றபிமானித்தலின்மை, ஆவியளித்தல்-நினைவன்றி யொன்றைச் சுட்டுதலின்மை, பொருள் அளித்தல்-விட்ட பொருள்களின் மேற்பற்றுதலின்மை, பணி-கட்டளை; பணி-தொழில் (14) நிழல்-செல்வம் (20) ஒப்படைத்தல்-ஒப்புக்கொடுத்தல், அம்பு-நீர் (23) அநகன்-கடவுள், (24) வரம்-தேவசபை (30) நயப்பு-மகிவு, நேர்-செவ்வை பயப்பு-பொன்மை (31) புறவம்-முல்லை நிலம், தொல்-பழமையான. (32) அளியன்-எளியேன்; மறவி-தேன். (35) வையம்-தேர்; காணம்-பொன், குலிசம்-வச்சிராயுதம் (41) நிதி-பொன், இரவு-வறுமை (42) கவந்தம்-நீர், அனந்தைபூமி, கடி-நாற்றம், சரோசம்-தாமரை (45) வரன்-பிரமன் (46) உரு-ஒளி, நிழல்-நிறம் (47) சம்பம்-குலிசம், உரவு-உணர்வு. (52) மா-வண்டு, வடம்-பூவரும்பு (56) ததி-தயிர் (57) நூங்கு-மிகுதி (66) ஆங்கு-போல, அளம்-நெருக்கம் (69) அடைவு-ஆதரவு, ஆடல்-பேசல் (70) சாயம்-மாலைப்போது, என்றூழ்-சூரியன், நாகம்-மலை (74) இளை-வேலி, சூன்றல்-களைதல்; மான்ற-மயக்கம், உந்துஎலை-தள்ளுஞ் சமயம் (79) களங்கு-விஷம், இருள்-நரகம், கட-செல், கதை-சொல், ததி-சமயம், படர்-நினைத்தல் (92) சாகை-வேதம் துப்பு-மேன்மை. (98) கதம்-உக்கிரம் (100) சொல்-புகழ், அல்கில-குறையாத.

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
5	7	1	சித்தர்	சித்தர்
14	69	3	நின்	நின